| English | Tamil |
|---|---|
| **GUIDELINES FOR YOUR COVID SAFETY PLAN** | ***உங்கள் COVID SAFETY PLAN-க்கான வழிகாட்டுதல்கள்*** |
| Updated 9 October 2020 | *புதுப்பிக்கப்பட்டது 9 அக்டோபர் 2020* |
| **Thank you for working with us to reduce the impact of COVID-19 in the ACT.** | ***ACT-இல் COVID-19 இன் தாக்கத்தை குறைக்க எங்களுடன் பணியாற்றுகின்றமைக்கு நன்றி.*** |
| This document provides guidance for the following businesses and undertakings that are required to develop a COVID Safety Plan: | *COVID Safety Plan ஒன்றை உருவாக்கவேண்டிய கடப்பாடுள்ள பின்வரும் வணிகங்கள் மற்றும் நிறுவனங்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை இந்த ஆவணம் வழங்குகிறது:* |
| • Restaurants and cafes offering dine-in services (includes casino and hotel-based restaurants, bars and food courts<br>• Gyms, health clubs and fitness or wellness centres<br>• Yoga, barre, pilates and spin facilities<br>• Swimming pools<br>• Boot camps and personal trainers<br>• Personal services (e.g. hairdressers, barbers, nail salons, tattoo or body modification studios, day spas, and non-therapeutic massage services)<br>• Steam-based services including saunas, steam rooms, steam cabinets and bathhouses<br>• Organisers of weddings and funerals<br>• Auction houses<br>• Real estate agencies conducting open home inspections or auctions<br>• Libraries | • *Dine-in சேவைகளை வழங்கும் உணவகங்கள் மற்றும் cafes (ஹோட்டல் சார்ந்த உணவகங்கள், casino மற்றும் bars, food courts இதில் அடங்கும்)*<br>• *Gyms, சுகாதார கிளப்புகள், உடற்பயிற்சி அல்லது ஆரோக்கிய மையங்கள்*<br>• *யோகா, barre, pilates, spin வசதிகள்*<br>• *நீச்சல் குளங்கள்*<br>• *Boot camps மற்றும் தனிப்பட்ட பயிற்சியாளர்கள்*<br>• *தனிப்பட்ட சேவைகள் (உதாரணமாக சிகையலங்கார நிபுணர்கள், முடிதிருத்துநர்கள், nail salons, tattoo அல்லது body modification studios, day spas மற்றும் non therapeutic massage சேவைகள்)*<br>• *Saunas, steam rooms, steam cabinets மற்றும் bathhouses உள்ளிட்ட நீராவி சார்ந்த சேவைகள்*<br>• *திருமணங்கள் மற்றும் இறுதி சடங்குகளின் ஏற்பாட்டாளர்கள்*<br>• *ஏல வீடுகள்*<br>• *Open home inspections அல்லது ஏலங்களை நடத்தும் வீடு மனை விற்பனை முகவர்கள்*<br>• *நூலகங்கள்* |

| | |
|---|---|
| • Galleries, museums, national institutions or historic sites.<br>• Clubs and licensed venues<br>• Cinemas, movie theatres and open-air or drive-in cinemas<br>• Choirs, bands and orchestras<br>• Dance classes<br>• Concert venues, theatres, arenas, auditoriums or outdoor venues<br>• Indoor amusement centres, arcades, and outdoor or indoor play centres<br>• Hotels<br>• Organised sport<br>• Betting agencies and gaming venues<br>• Adult venues | • காட்சியகங்கள், அருங்காட்சியகங்கள், தேசிய நிறுவனங்கள்<br>• கிளப்புகள் மற்றும் உரிமம்பெற்ற இடங்கள்<br>• சினிமாக்கள், திரைப்பட தியேட்டர்கள் மற்றும் திறந்தவெளி அல்லது *drive-in* சினிமாக்கள்<br>• *Choirs,* இசைக்குழுக்கள் மற்றும் *orchestras*<br>• நடன வகுப்புகள்<br>• கச்சேரி அரங்குகள், தியேட்டர்கள், அரங்கங்கள், ஆடிட்டோரியங்கள் அல்லது வெளிப்புற இடங்கள்<br>• உட்புற கேளிக்கை மையங்கள், ஆர்கேடுகள் மற்றும் வெளிப்புற அல்லது உட்புற விளையாட்டு மையங்கள்<br>• ஹோட்டல்கள்<br>• ஒழுங்கமைக்கப்பட்ட விளையாட்டு<br>• பந்தய முகவர் மற்றும் விளையாட்டு இடங்கள்<br>• *Adult venues* |
| For places of worship and religious ceremonies, a COVID Safety Plan is required for those who wish to increase gatherings to more than 20 people.<br>Refer to COVID Safety Plan Checklist for religious organisations and institutions providing religious, funeral or wedding services in the ACT. | வழிபாட்டுத் தலங்கள் மற்றும் மத விழாக்களில் 20 க்கும் மேற்பட்டவர்களை அனுமதிக்க விரும்புவோர் **COVID Safety Plan** ஒன்றை கொண்டிருக்க வேண்டும்.<br>*ACT-*இல் இறுதி சடங்கு அல்லது திருமண சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் மற்றும் வழிபாட்டுத் தலங்களுக்கான *COVID Safety Plan Checklist-* ஐப் பார்க்கவும். |
| **What is a COVID Safety Plan?** | ***COVID Safety Plan* என்றால் என்ன?** |
| A COVID Safety Plan is a plan that sets out how you will keep your employees and customers safe during the COVID-19 pandemic. It will also help you ensure your business or undertaking is complying with relevant laws and regulations. | *COVID Safety Plan* என்பது *COVID -19* பரவலின்போது உங்கள் ஊழியர்களையும் வாடிக்கையாளர்களையும் எவ்வாறு பாதுகாப்பாக வைத்திருப்பீர்கள் என்பதைக் காண்பிக்கும் ஒரு திட்டமாகும். இது உங்கள் வணிகம் அல்லது பொறுப்பு சம்பந்தப்பட்ட சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்குவதை உறுதிப்படுத்தவும் உதவும். |

| **Templates** | ***Templates*** |
|---|---|
| The ACT does not require the use of a standard template for ACT businesses when developing their COVID Safety Plan. This is to help maintain a level of flexibility for businesses. | *ACT வணிகங்கள் அவற்றின் COVID Safety Plan-ஐ உருவாக்கும்போது standard template-ஐப் பயன்படுத்தவேண்டுமென ACT கோரவில்லை. வணிகங்களுக்கான ஒரு நெகிழ்வுத்தன்மையை பேணுவதற்கு உதவுவதே இதற்கான காரணமாகும்.* |
| Your COVID Safety Plan should consist of a document in a written or electronic form that can be produced during a compliance check. When developing your COVID Safety Plan you should take into consideration the requirements of the Public Health Directions and any other requirements for your sector/industry specific to the ACT, along with the information and advice provided in these guidelines. | *உங்கள் COVID Safety Plan எழுத்து அல்லது மின்னணு வடிவத்திலான ஆவணமாக இருக்க வேண்டும் என்பதுடன் சோதனை நடவடிக்கையின்போது அதை காண்பிக்கக்கூடியதாக இருக்க வேண்டும். உங்கள் COVID Safety திட்டத்தை உருவாக்கும் போது, இங்கு கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள், Public Health Directions இல் கொடுக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்கள் மற்றும் ஆலோசனைகளுடன், உங்கள் துறை /தொழில்துறைக்கு பொருத்தமான வேறு ஏதேனும் தேவைகள் ACT-இல் இருந்தால் அவற்றையும் கருத்தில் கொள்ள வேண்டும்.* |
| It should include your policies in relation to matters outlined in these guidelines, including:<br>• Ensuring physical distancing<br>• Cleaning, sanitising and hygiene activities<br>• Managing staff or customers presenting with illness<br>• Additional requirements for certain businesses and organisations, including those required to request contact information from patrons or visitors and record it if received<br>• Compliance and enforcement | *இந்த வழிகாட்டுதலில் கோடிட்டுக் காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பான உங்கள் கொள்கைகளை உள்ளடக்கியிருக்க வேண்டும். பின்வருவனவற்றை இது உள்ளடக்குகிறது:*<br>• *சமூக இடைவெளி பேணப்படுவதை உறுதிசெய்தல்*<br>• *சுத்தம் செய்தல், சுத்திகரிப்பு(Sanitising) மற்றும் சுகாதார நடவடிக்கைகள்*<br>• *நோய்வாய்ப்பட்ட நிலையில் வந்திருக்கும் ஊழியர்கள் அல்லது வாடிக்கையாளர்களை நிர்வகித்தல்*<br>• *குறிப்பிட்ட சில வணிகங்கள் மற்றும் நிறுவனங்களுக்கான கூடுதல் நிபந்தனைகள். வாடிக்கையாளர்களிடமிருந்தும் தொடர்பு விவரங்களைக் கேட்டு, அவை வழங்கப்பட்டால் அந்த விவரங்களை பதிவு செய்வது போன்றவை இதில் அடங்கும்*<br>• *கட்டுப்படுதல் மற்றும் நடைமுறைப்படுத்தல்* |

| | |
|---|---|
| Some jurisdictions and industry peak bodies have developed templates.<br><br>For businesses seeking a template the NSW and Commonwealth Governments websites may have some useful information. Alternatively get in touch with your industry peak body. | *சில அதிகார வரம்புகள் மற்றும் தொழில்துறை உச்ச அமைப்புகள் template-களை உருவாக்கியுள்ளன.*<br><br>*ஒரு template-ஐத் தேடும் வணிகங்களுக்கு, NSW மற்றும் காமன்வெல்த் அரசாங்கங்களின் வலைத்தளங்கள் சில பயனுள்ள தகவல்களைக் கொண்டிருக்கலாம்.*<br>*மாற்றாக உங்கள் தொழில்துறை உச்ச அமைப்பினைத் தொடர்பு கொள்ளுங்கள்.* |
| Can be found on the NSW Government Safe Business web page | *இந்த விபரங்களை NSW Government Safe Business web page-இல் பார்வையிடலாம்* |
| Return to Play in a COVID Safe Environment Plan | *COVID Safe Environment Plan-உடன் விளையாட்டுகளை மீள ஆரம்பித்தல்* |
| The ACT Government has developed specific guidelines for sporting clubs and venues to follow.  If your sporting organisation or club has a 'Return to Play in a COVID Safe Environment Plan', this will meet the requirements of the COVID Safety Plan.  Therefore, there is no requirement to produce an additional COVID Safety Plan. | *ACT அரசு விளையாட்டுக் கழகங்கள் மற்றும் இடங்களுக்கான குறிப்பிட்ட வழிகாட்டுதல்களை உருவாக்கியுள்ளது. உங்கள் விளையாட்டு அமைப்பு அல்லது கிளப்பில் 'Return to Play in a COVID Safe Environment Plan' இருந்தால், இது COVID Safety திட்டத்திற்கான தேவையைப் பூர்த்தி செய்யும். எனவே, கூடுதல் COVID Safety திட்டத்தை உருவாக்க வேண்டிய அவசியமில்லை.* |
| Visit the Sports ACT website to download the guidelines for developing a Return to Play in a COVID Safe Environment plan. | *COVID Safe Environment Plan-உடன் விளையாட்டுக்களுக்கு மீள திரும்புவதற்கான வழிகாட்டுதல்களைப் பதிவிறக்க Sports ACT website ஐப் பார்வையிடவும்.* |
| AIS Return to Sport Toolkit | *AIS Return to Sport Toolkit* |
| Can be found on the Sports Australia website. | *இந்த விபரங்களை Sports Australia website.-இல் பார்வையிடலாம்* |

| COVID Safety Plan for Adult Venues | வயது வந்தோருக்கான இடங்களுக்கான COVID Safety Plan |
|---|---|
| The ACT Government has developed a specific plan for strip clubs, brothels and escort agencies to follow that offers specific advice for the industry and employees.<br>For more information about developing a COVID Safety Plan for an adult venue go to the business and work section of the COVID-19 website. | Strip கிளப்புகள், விபச்சார விடுதிகள் மற்றும் escort agencies ஆகியவற்றிற்கான ஒரு குறிப்பிட்ட திட்டத்தை ACT அரசு உருவாக்கியுள்ளது, இது தொழில் மற்றும் பணியாளர்களுக்கு குறிப்பிட்ட ஆலோசனைகளை வழங்குகிறது.<br>வயது வந்தோருக்கான இடத்திற்கு COVID Safety திட்டத்தை உருவாக்குவது பற்றிய கூடுதல் தகவலுக்கு, business and work section of the COVID-19 website.க்குச் செல்லவும். |
| **Your obligations** | **உங்கள் கடமைகள்** |
| The ACT Public Health Directions requires all venues, facilities and businesses that are permitted to open to develop a COVID Safety Plan. | மீண்டும் திறப்பதற்கு அனுமதிக்கப்பட்ட அனைத்து இடங்கள், வசதிகள் மற்றும் வணிகங்கள்<br>COVID Safety திட்டத்தை உருவாக்க வேண்டுமென ACT Public Health Directions அறிவுறுத்தியுள்ளது. |
| Your COVID Safety Plan does not need to be submitted for approval but must be available to be produced on request by compliance and enforcement officers. | COVID Safety Plan ஐ அமலாக்க அதிகாரிகள் கேட்கும்பட்சத்தில் காண்பிப்பதற்கு நீங்கள் தயாராக இருக்க வேண்டும். ஆனால் ஒப்புதல் பெறுவதற்காக அதை சமர்ப்பிக்கத் தேவையில்லை. |
| The development of a COVID Safety Plan is an important step in ensuring that you keep your staff and the broader community safe. You should consult with your staff as you develop your COVID Safety Plan to ensure they are aware of their responsibilities and are able to carry them out. | உங்கள் ஊழியர்களையும் பரந்த சமூகத்தையும் பாதுகாப்பாக வைத்திருப்பதை உறுதி செய்வதில் COVID Safety திட்டத்தின் வளர்ச்சி ஒரு முக்கியமான படியாகும். உங்கள் COVID Safety திட்டத்தை நீங்கள் உருவாக்கும்போது, ஊழியர்கள் தங்கள் பொறுப்புகளைப் பற்றி அறிந்திருக்கிறார்கள் என்பதையும், அவற்றைச் செயல்படுத்த முடிகிறது என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். |
| The COVID Safety Plan should identify the risks posed by COVID-19 to your staff (including contractors and volunteers), business and customers, and should be guided by these guidelines. | உங்கள் ஊழியர்கள், (ஒப்பந்தக்காரர்கள் மற்றும் தன்னார்வலர்கள் உட்பட) வணிகம் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு COVID-19 ஏற்படுத்தும் தாக்கங்களை அடையாளம் காணும்வகையில் COVID Safety Plan அமைய வேண்டும். மேலும் இந்த வழிகாட்டுதலில் உள்ளவற்றின்படி செயற்படுத்தப்பட வேண்டும். |

| | |
|---|---|
| Your COVID Safety Plan should be revisited and updated following further updates to public health advice, and any changes to the Public Health Directions. The most recent Public Health Directions can be found on the [COVID-19 website.] | பொது சுகாதார ஆலோசனைகள் மற்றும் அறிவுறுத்தல்களில் மாற்றங்கள் இருந்தால், உங்கள் COVID Safety Plan- ஐ அதற்கேற்ப மாற்றியமைக்க நீங்கள் தயாராக இருக்க வேண்டும் பொது சுகாதார ஆலோசனைகளில் கொண்டுவரப்பட்டுள்ள சமீபத்திய மாற்றங்களை அறிந்துகொள்ள: [COVID-19 website.] |
| Not all the points in this checklist will apply to every business, and this checklist is not intended to be exhaustive. | ஒவ்வொரு வணிகத்திற்கும் இந்த பட்டியலில் உள்ள எல்லா அம்சங்களும் பொருந்தாது. மேலும் இந்தப்பட்டியலில் உள்ளவை, முழுமையாக இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படவில்லை |
| Completing a COVID Safety Plan does not replace your responsibilities under the *Work Health Safety Act 2011* (ACT). | *COVID Safety Plan ஒன்றைப் பூர்த்திசெய்வது, Work Health Safety Act 2011 (ACT)-இன் கீழ் உங்கள் பொறுப்புகளை எவ்விதத்திலும் மாற்றாது.* |
| **Physical distancing** | **சமூக இடைவெளி** |
| • All businesses and undertakings should implement physical distancing as outlined in the Public Health Directions. | • அனைத்து வணிகங்களும் நிறுவனங்களும் பொது சுகாதார அறிவுறுத்தல்களில் காட்டப்பட்டுள்ளபடி சமூக இடைவெளியைப் பேண வேண்டும் |
| • All venues can have 25 people (excluding staff) across the entire venue. If venues wish to have more than 25, venues can use the sum of:<br>- One person per four square metres of usable space for each indoor space (up to a max of 200 people); and<br>- One person per two square metres of usable space for each outdoor space (up to a max of 200 people). | • அனைத்து இடங்களிலும் 25 பேர் (ஊழியர்களைத் தவிர) முழு இடத்திலும் இருக்க முடியும். தமது இடத்தில் 25 பேருக்கு மேல் இருக்க விரும்பினால், அவர்கள் இந்த அளவீட்டை பயன்படுத்தலாம்:<br>- பயன்படுத்தக்கூடிய ஒவ்வொரு உட்புற இடத்திற்கும் நான்கு சதுர மீட்டருக்கு ஒரு நபர் (அதிகபட்சம் 200 பேர் வரை) மற்றும்<br>- பயன்படுத்தக்கூடிய ஒவ்வொரு வெளிப்புற இடத்திற்கும் இரண்டு சதுர மீட்டருக்கு ஒரு நபர் (அதிகபட்சம் 200 பேர் வரை). |

| | |
|---|---|
| • Hospitality venues may consider using an additional option when determining their venue capacity if this suits them. That is, venues with usable space between 101 and 200 square metres can have 50 people across the whole venue (includes all indoor/outdoor venues).<br>• Ensure appropriate physical distancing measures are in place, including maintaining a distance of 1.5 metres between people, wherever possible.<br>• For more information about how to implement physical distancing measures in your premises go to the business and work section of the COVID-19 website. | • *விருந்தோம்பல் இடங்கள் தங்களுக்கு ஏற்ற இடத்தின் திறனை நிர்ணயிக்கும் போது கூடுதல் தெரிவுகளைப் பயன்படுத்துவதைக் கருத்தில் கொள்ளலாம். அதாவது, 101 முதல் 200 சதுர மீட்டருக்கு இடையிலான பயன்படுத்தக்கூடிய பரப்பு கொண்ட இடங்கள் முழு இடத்திலும் 50 நபர்களைக் கொண்டிருக்கலாம் (அனைத்து உட்புற /வெளிப்புற இடங்களும் அடங்கும்).*<br>• *சாத்தியமான இடங்களில் மக்களுக்கு இடையில் 1.5 மீட்டர் தூரத்தை பராமரிப்பது உட்பட, பொருத்தமான சமூக இடைவெளி நடவடிக்கைகள் உள்ளன என்பதை உறுதிப்படுத்தவும்.*<br>• *உங்கள் வளாகத்தில் சமூக இடைவெளி நடவடிக்கைகளை எவ்வாறு செயல்படுத்துவது என்பது பற்றிய கூடுதல் தகவலுக்கு, COVID-19 website. இன் business and work பிரிவுக்குச் செல்லவும்.* |

| **Cleaning, Sanitising and Hygiene Activities** | **சுத்தம் செய்தல், சுத்திகரிப்பு(Sanitising) மற்றும் சுகாதார நடவடிக்கைகள்** |
|---|---|
| • All businesses and undertakings are required to demonstrate appropriate hand and general hygiene.<br>• Businesses should also ensure they maintain appropriate cleaning and sanitising practices and supplies.<br>• It is strongly recommended that all people working within a business, whether they be owners, employees or contractors, undertake relevant training.<br>• A range of training options are available, some of which are nationally recognised and free to complete.<br>• For more information on COVID-19 infection control training go to Skills ACT website.<br>• Checklists about keeping your workplace COVID safe can be found on the Safework Australia website.<br>• For practical resources go to the signs and factsheets page on the COVID-19 website. | • *அனைத்து வணிகங்களும் நிறுவனங்களும் கை மற்றும் சுவாசம் தொடர்பிலான நல்ல சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.*<br>• *சுத்திகரிப்புபணி மேற்கொள்ளப்படுவதையும் நன்றாக sanitise செய்யப்படுவதையும் வணிகங்கள் உறுதி செய்ய வேண்டும்.*<br>• *வணிக உரிமையாளர்கள், ஊழியர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் உட்பட உங்களிடம் பணிபுரியும் அனைவரும், தேவைப்படும் பயிற்சியை மேற்கொள்ள வேண்டும் என பரிந்துரைக்கப்படுகிறது.*<br>• *தேசிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட இலவச பயிற்சிகள் உட்பட பல வகையான பயிற்சிகள் உள்ளன.*<br>• *COVID-19 தொற்றுநோய் தடுப்பு பயிற்சி பற்றிய கூடுதல் தகவல்களைப் பெற Skills ACT website.*<br>• *உங்கள் பணியிடத்தை COVID இலிருந்து பாதுகாப்பாக வைத்திருப்பது குறித்த சரிபார்ப்பு பட்டியல்களைக் காண Safework Australia website.*<br>• *நடைமுறை ஆதாரங்களுக்காக COVID-19 website. இல் அறிவித்தல்கள் மற்றும் தகவல்தாள்கள் பக்கத்திற்குச் செல்லவும்.* |
| **Managing staff or patrons/visitors presenting with illness** | **நோய்வாய்ப்பட்ட நிலையில் வந்திருக்கும் ஊழியர்கள் அல்லது வாடிக்கையாளர்களை நிர்வகித்தல்** |
| • The Government is urging everyone to stay home if they are unwell. This applies to staff and the broader community.<br>• Businesses and undertakings should be prepared to turn patrons or visitors away if they have clear symptoms of illness. | • *உடல்நலக்குறைவு ஏற்பட்டால் மக்கள் வீட்டிலேயே இருக்க வேண்டும் என அரசு அறிவுறுத்தியுள்ளது. இதில் ஊழியர்கள் மற்றும் சமூக அங்கத்தவர்களும் அடங்குவர்.*<br>• *தெளிவான நோய்அறிகுறிகளுடன் வருபவர்களை, திருப்பி அனுப்புவதற்கு வணிகங்களும் நிறுவனங்களும் தயாராக இருக்க வேண்டும்.* |

| | |
|---|---|
| • A Hardship Isolation Payment is available for eligible workers who are unable to temporarily work under a COVID-19 direction or health guidance. For more information go to the [Families and households page.](#)<br>• Ensure your staff are aware of any workplace policies on paid pandemic leave, if available.<br>• If a direction is issued requiring your workplace to close due to confirmed case of COVID19 contamination, you must notify WorkSafe ACT. | • *COVID -19 அறிவுறுத்தல் அல்லது சுகாதார வழிகாட்டுதலின் கீழ் தற்காலிகமாக வேலை செய்ய முடியாத நிலையிலுள்ள தகுதியுள்ள தொழிலாளர்களுக்கு Hardship Isolation Payment கிடைக்கிறது. மேலும் தகவலுக்கு [Families and households page.](#)குச் செல்லவும்.*<br>• *உங்களுக்கு பொருந்துமெனில் paid pandemic leave குறித்த பணியிடக் கொள்கைகளை உங்கள் ஊழியர்கள் அறிந்திருப்பதை உறுதிசெய்க.*<br>• *COVID 19 தொற்று உறுதிப்படுத்தப்பட்டதன் காரணமாக உங்கள் பணியிடத்தை மூட வேண்டும் என்று ஒரு அறிவுறுத்தல் வழங்கப்பட்டால், நீங்கள் WorkSafe ACTக்கு அறிவிக்க வேண்டும்.* |
| **Additional Requirements** | **மேலதிக நிபந்தனைகள்** |
| Some businesses and organisations will be required to provide additional information in their COVID Safety Plans and request contact information from patrons and visitors and record such details if they are provided. | *சில வணிகங்கள் மற்றும் நிறுவனங்கள் தங்களது COVID Safety Plans-இல் கூடுதல் தகவல்களை வழங்க வேண்டும் என்பதுடன், பார்வையாளர்களிடமிருந்தும் வாடிக்கையாளர்களிடமிருந்தும் தொடர்பு விவரங்களைக் கேட்டு, அவை வழங்கப்பட்டால் அந்த விவரங்களை பதிவு செய்ய வேண்டும்.* |
| **Collecting contact details** | **தொடர்பு விவரங்களை சேகரித்தல்** |
| **The following businesses must request all patrons provide their first name and contact details:** | *பின்வரும் வணிகங்கள் அனைத்து வாடிக்கையாளர்களினதும் முதல் பெயர் மற்றும் தொடர்பு விவரங்களை வழங்குமாறு கோர வேண்டும்:* |
| • Restaurants and cafes offering dine-in services (includes casino and hotel-based restaurants, bars and food courts)<br>• Gyms, health clubs and fitness or wellness centres<br>• Yoga, barre, pilates and spin facilities<br>• Boot camps and personal trainers | • *Dine-in சேவைகளை வழங்கும் உணவகங்கள் மற்றும் cafes (ஹோட்டல் சார்ந்த உணவகங்கள், casino மற்றும் bars, food courts இதில் அடங்கும்)*<br>• *Gyms, சுகாதார கிளப்புகள், உடற்பயிற்சி அல்லது ஆரோக்கிய மையங்கள்*<br>• *யோகா, barre, pilates, spin வசதிகள்*<br>• *Boot camps மற்றும் தனிப்பட்ட பயிற்சியாளர்கள்* |

| | |
|---|---|
| • Personal services (includes hairdressers, barbers, nail salons, tattoo or body modification studios, day spas, and non-therapeutic massage services)<br>• Organisers of weddings and funerals<br>• Auction houses<br>• Real estate agencies conducting open home inspections or auctions<br>• Clubs, licensed venues and nightclubs that are operating as bars<br>• Cinemas, movie theatres and open air or drive-in cinemas<br>• Concert venues, theatres, arenas or auditoriums<br>• Conference and convention venues<br>• Indoor amusement centres, arcades and indoor play centres<br>• Hotels<br>• Betting agencies and gaming venues<br>• Strip clubs, brothels and escort agencies<br>• Places of worship where gatherings will exceed 20 people | • தனிப்பட்ட சேவைகள் (உதாரணமாக சிகையலங்கார நிபுணர்கள், முடிதிருத்துநர்கள், nail salons, tattoo அல்லது body modification studios, day spas மற்றும் non therapeutic massage சேவைகள்)<br>• திருமணங்கள் மற்றும் இறுதி சடங்குகளின் ஏற்பாட்டாளர்கள்<br>• ஏல வீடுகள்<br>• Open home inspections அல்லது ஏலங்களை நடத்தும் வீடு மனை விற்பனை முகவர்கள்<br>• கிளப்புகள் மற்றும் உரிமம்பெற்ற இடங்கள் மற்றும் பார்களாக இயங்கும் nightclubs<br>• சினிமாக்கள், திரைப்பட தியேட்டர்கள் மற்றும் திறந்தவெளி அல்லது drive-in சினிமாக்கள்<br>• கச்சேரி அரங்குகள், தியேட்டர்கள், அரங்கங்கள், ஆடிட்டோரியங்கள் அல்லது வெளிப்புற இடங்கள்<br>• மாநாடு மற்றும் மாநாட்டு இடங்கள்<br>• உட்புற கேளிக்கை மையங்கள், ஆர்கேடுகள் மற்றும் வெளிப்புற அல்லது உட்புற விளையாட்டு மையங்கள்<br>• ஹோட்டல்கள்<br>• பந்தய முகவர் மற்றும் விளையாட்டு இடங்கள்<br>• Strip clubs, விபச்சார விடுதி மற்றும் escort agencies<br>• 20 பேருக்கு மேற்பட்டவர்களைக் கொண்டிருக்கும் வழிபாட்டுத் தலங்கள் |
| **Collection methods** | **சேகரிப்பு முறைகள்** |
| We understand the process of collecting information from every patron is time consuming. Most people would now be aware of the requirements for businesses to request their details for contact tracing, and are happy to oblige, however some may have privacy concerns. | ஒவ்வொரு வாடிக்கையாளரிடமிருந்தும் தகவல்களைச் சேகரிக்கும் செயல்முறை நேரத்தை எடுத்துக்கொள்வதை நாங்கள் புரிந்துகொள்கிறோம். தொடர்புத் தடமறிதலுக்காக வணிகங்கள் தங்கள் விவரங்களைக் கோருவதற்கான தேவைகள் குறித்து பெரும்பாலான மக்கள் இப்போது அறிந்திருப்பார்கள், மேலும் இதற்கு கட்டுப்படுவதில் மகிழ்ச்சியடைகிறார்கள், இருப்பினும் சிலருக்கு தனியுரிமை தொடர்பான கவலைகள் இருக்கலாம். |

| | |
|---|---|
| For example, an A4 notebook left out the front of a restaurant with all seated guests’ details on display for the next person to see, copy/take a photo of, or handing over an electronic device for patrons to enter their own information, is highly discouraged. | *எடுத்துக்காட்டாக, ஒரு A4 நோட்புக் ஒரு உணவகத்தின் முன்புறத்தில் அமர்ந்திருக்கும் அனைத்து விருந்தினர்களின் விவரங்களுடன் காட்சிக்கு வைக்கப்பட்டு அடுத்த நபருக்கு பார்க்க நகலெடுக்க/புகைப்படம் எடுக்கக்கூடியதாக இருப்பது, அல்லது ஒரு மின்னணு சாதனத்தை வாடிக்கையாளர்கள் தங்கள் சொந்த தகவல்களை பதிவிடுவதற்கு ஒப்படைத்தல் போன்றவை விரும்பப்படுவதில்லை.* |
| Physical and electronic security must be considered to help guarantee that your patrons’ personal information is secure and the workspace can facilitate good privacy practices. | *உங்கள் வாடிக்கையாளர்களின் தனிப்பட்ட தகவல்கள் பாதுகாப்பானவை என்பதை உறுதிப்படுத்தும் வகையிலும், பணியிடங்கள் நல்ல தனியுரிமை நடைமுறைகளை எளிதாக்குவதற்கு உத்தரவாதம் அளிக்க உதவும் வகையிலும் விபரங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.* |
| **Paper-based collection** | ***கடதாசி சார்ந்த சேகரிப்பு*** |
| Consider having a staff member collect patrons’ details on arrival (or once they are seated) on a form that is kept private from other patrons.<br>Once filled in, the forms should be kept in a place that is secure and out of sight of other patrons and unauthorised persons. | *வாடிக்கையாளர் வரும்போது வாசலில் நிற்கும் ஒரு ஊழியர்(அல்லது வாடிக்கையாளர் அமர்ந்த பின்னர்)மற்ற வாடிக்கையாளர்களின் பார்வையில் படாதவகையில் தனிப்பட்ட முறையில் வைக்கப்படும் ஒரு படிவத்தில் விவரங்களை சேகரிப்பது தொடர்பில் கவனம் செலுத்தலாம்.*<br>*பூர்த்தி செய்யப்பட்டவுடன் படிவங்கள் பாதுகாப்பான மற்றும் பிற வாடிக்கையாளர்கள் மற்றும் அங்கீகரிக்கப்படாத நபர்களின் பார்வையில் பாடாத இடத்தில் வைக்கப்பட வேண்டும்.* |
| **Electronic collection** | ***மின்னணு சேகரிப்பு*** |
| The Check in CBR app is a contactless, secure and convenient way for customers to sign into a Canberra venue.<br>The app enables individuals to check-in to venues and have their data stored securely with ACT Health in the event contact tracking is needed. | *Check in CBR app வாடிக்கையாளர்களுக்கு கன்பராவிலுள்ள இடமொன்றிற்குள் உள்நுழைய பாதுகாப்பான மற்றும் வசதியான வழியாகும். தனிநபர்கள் தாம் செல்லும் இடங்களில் அவர்களின் தரவை, ACT Health உடன் பாதுகாப்பாக சேமிக்க(contact tracking நோக்கத்திற்காக) இந்த app உதவுகிறது.* |

| | |
|---|---|
| When you register your business you will be provided a unique QR code. Customers with the Check In CBR app simply scan the QR code and show your staff that they have successfully checked in. | உங்கள் வணிகத்தை நீங்கள் பதிவுசெய்யும்போது உங்களுக்கு ஒரு தனிப்பட்ட QR குறியீடு வழங்கப்படும். Check In CBR app- ஐக் கொண்ட வாடிக்கையாளர்கள் QR குறியீட்டை ஸ்கேன் செய்து, அவர்கள் வெற்றிகரமாக Check In செய்ததை உங்கள் ஊழியர்களுக்குக் காட்டுங்கள். |
| To find out more and register your business visit the Check In CBR page on the COVID-19 website. | மேலும் அறியவும் உங்கள் வணிகத்தை பதிவு செய்யவும் COVID-19 website.இல் Check In CBR பக்கத்தைப் பார்வையிடவும். |
| Businesses collecting personal data via other electronic means (such as an iPad) must ensure systems are privacy compliant. Devices should also not be handed to patrons to enter their personal details as this creates a hygiene risk. Instead, have your staff operate the device.<br>Ensure passwords are regularly changed, and your application protects data against unauthorised access. | பிற மின்னணு வழிமுறைகள் (ஐபாட் போன்றவை) வழியாக தனிப்பட்ட தரவை சேகரிக்கும் வணிகங்கள் அமைப்புகள் தனியுரிமைக்கு இணங்குவதை உறுதி செய்ய வேண்டும்.<br>இது சுகாதார அபாயத்தை உருவாக்குவதால் தங்கள் தனிப்பட்ட விவரங்களை பதிவுசெய்வதற்கு குறித்த சாதனங்களை வாடிக்கையாளர்களிடம் ஒப்படைக்கக்கூடாது. அதற்கு பதிலாக உங்கள் ஊழியர்கள் சாதனத்தை இயக்க வேண்டும்.<br>கடவுச்சொற்கள் தவறாமல் மாற்றப்படுவதை உறுதிசெய்வதுடன் தகவல்கள் அங்கீகரிக்கப்படாதவர்களின் பார்வைக்குச் செல்லாதவாறு பாதுகாக்கவும். |
| Some businesses are using QR codes to collect customer details. A QR code is just like a barcode, with information that can be read by a smart phone camera. QR codes are convenient for businesses and customers. They also provide a hygienic, contactless way of signing into a venue.<br>Businesses can find QR code guest registration services by searching online or if you have an IT service provider, ask them for advice. Make sure you read the full terms and conditions of the service carefully. | சில வணிகங்கள் வாடிக்கையாளர் விவரங்களை சேகரிக்க QR குறியீடுகளைப் பயன்படுத்துகின்றன. ஒரு QR குறியீடு ஒரு பார்கோடு போன்றது, ஸ்மார்ட் போன் கேமரா மூலம் படிக்கக்கூடியது. QR குறியீடுகள் வணிகங்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் வசதியானவை. இது ஒரு இடத்திற்கு உள்நுழைவதற்கான contactless-தொடர்பு இல்லாத வழியையும் வழங்குகிறது.<br>வணிகங்கள் QR குறியீடு மூலமான விருந்தினர் பதிவு விபரங்களை ஆன்லைனில் தேடுவதன் மூலம் காணலாம். அல்லது உங்களிடம் தகவல் தொழில்நுட்ப சேவை வழங்குநர் இருந்தால், அவர்களிடம் ஆலோசனை கேட்கவும். சேவையின் முழு விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் கவனமாகப் படித்திருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். |

| **Compliance and enforcement** | **கட்டுப்படுதல் மற்றும் நடைமுறைப்படுத்தல்** |
|---|---|
| Developing and following a COVID Safety Plan is an important step in keeping your staff, customers, and the broader community safe as we continue to manage the impacts of the pandemic.<br>Compliance efforts will be focused on education and support. However, penalties could apply and may be issued for those who put the community at risk through serious or repeated breaches of the legal requirements and obligations. | *நோய்த்தொற்றினால் ஏற்படும் தாக்கங்களை நாம் தொடர்ந்தும் நிர்வகித்துவரும் இவ்வேளையில், உங்கள் ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் சமூகத்தை பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு ஒரு COVID Safety Plan-ஐ உருவாக்கி அதைப் பின்பற்றுவது  முக்கியம். அமலாக்க முயற்சிகள், கல்வி மற்றும் உதவிகளில் கவனம் செலுத்தும். இருப்பினும், சட்ட ஆலோசனை மற்றும் கடப்பாடுகளைப் பின்பற்றாமல் விடுவதன்மூலம் சமூகத்தை ஆபத்தில் தள்ளுபவர்களுக்கு அபராதம் விதிக்கப்படலாம்.* |
| **Signage** | **அறிவித்தல்/விளம்பரம்** |
| All venues, facilities and businesses must clearly display occupancy allowance at entrance to each venue or space. | *அனைத்து இடங்கள், வசதிகள் மற்றும் வணிகங்கள் தாம் எத்தனைபேரை அனுமதிக்கலாம் என்பதை  தமது ஒவ்வொரு இடம் அல்லது இடத்தின் நுழைவாயிலில் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.* |
| Consider also displaying information to your customers and staff about your COVID Safety Plan. | *உங்கள் COVID-19 Safety Plan பற்றிய தகவல்களை, உங்கள் ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு காண்பிப்பது தொடர்பில் நீங்கள் கருத்தில் கொள்ளலாம்.* |
| • Templates for posters and signage are available on the signs and factsheets page of the COVID-19 website.<br>• Consider placing your COVID Safety Plan on your website or Facebook page. | • *சுவரொட்டிகள் மற்றும் அறிவித்தல்களுக்கான templates COVID-19 website. signs and factsheets பக்கத்தில் கிடைக்கின்றன*<br>• *உங்கள் COVID-19 Safety Plan-ஐ உங்கள் Facebook பக்கம் அல்லது இணையத்தளத்தில் பிரசுரிப்பது தொடர்பில் கவனம் செலுத்தலாம்* |
| **Calculating usable space** | **பயன்படுத்தக்கூடிய இடத்தைக் கணக்கிடுதல்** |
| For businesses operating under the one person per 4 square metre rule, you should refer to the fact sheet that assists you to calculate your business' usable space which can be found on the signs and factsheets section of the COVID-19 website. | *4 சதுர மீட்டர் விதிக்கு ஒரு நபர் விதியின் கீழ் செயல்படும் வணிகங்கள் உங்கள் வணிகத்திற்கு பொருந்தக்கூடிய இடத்தைக் கணக்கிட உதவும் அறிவிப்புகள் மற்றும் தகவல்தாள்களை COVID-19 website. இல் பார்வையிடலாம்.* |

| | |
|---|---|
| You should only factor in usable space when calculating how many people you can have in your premises. Usable space means the space that people can freely move around in, but does not include:<br>• Stages and similar areas,<br>• Restrooms, changerooms and similar areas,<br>• Areas occupied by fixtures, fittings and displays, and<br>• Staff only areas and areas that are closed off or not being used. | உங்கள் வளாகத்தில் எத்தனை நபர்களைக் கொண்டிருக்கலாம் என்பதைக் கணக்கிடும்போது நீங்கள் பயன்படுத்தக்கூடிய இடத்தை மட்டுமே கணக்கில்கொள்ள வேண்டும். பயன்படுத்தக்கூடிய இடம் என்பது மக்கள் சுதந்திரமாக நகரக்கூடிய இடமாகும். ஆனால் இதில் பின்வருவன அடங்காது:<br>• Stages மற்றும் ஒத்த பகுதிகள்<br>• ஓய்வறைகள், மாற்று அறைகள் மற்றும் ஒத்த பகுதிகள்<br>• Fixtures, fittings மற்றும் displays ஆகியவற்றால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகள் மற்றும்<br>• பணியாளர்களுக்கு மட்டுமான பகுதிகள் அல்லது மூடப்பட்ட மற்றும் பயன்படுத்தப்படாத பகுதிகள் |
| **Review and monitor** | **மதிப்பாய்வு மற்றும் கண்காணித்தல்** |
| • This document provides an overview of the risks that are likely to apply to most or all businesses in this sector. You should consider and address risks that may be specific to your business.<br>• Regularly review your policies and procedures to ensure they are consistent with current directions and advice provided by ACT Health.<br>• Ensure there is an accessible copy of your COVID Safety Plan available on your premises as it must be produced if requested from a relevant compliance and enforcement officer. This may include producing an electronic copy. | • பெரும்பாலான அல்லது அனைத்து வணிகளுக்குப் பொருந்தக்கூடிய சில ஆபத்துகள் பற்றிய தகவல்களை இந்த ஆவணம் வழங்குகிறது. உங்கள் வணிகத்திற்கு ஏற்படக்கூடிய சில பிரத்தியேக ஆபத்துகளைப் பற்றி நீங்கள் சிந்தித்து செயலாற்ற வேண்டும்.<br>• உங்களது கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகள் புதுப்பிக்கப்பட்ட நிலையில் இருப்பதையும், ACT Health-இன் ஆலோசனையுடன் ஒத்துப்போகிறதா என்பதையும் உறுதிப்படுத்த நீங்கள் தொடர்ந்து மதிப்பாய்வு செய்ய வேண்டும்.<br>• அமலாக்க அதிகாரிகள் கோரிக்கைவிடுத்தால் காண்பிப்பதற்கு ஏதுவாக, உங்கள் COVID-19 Safety Plan நகலை உங்கள் பணியிடத்தில் எப்போதும் வைத்திருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். மின்னணு நகலைத் தயாரிப்பதும் இதில் அடங்கும். |

| | |
|---|---|
| Failure to comply with directions may result in significant penalties.<br><br>Have a question? Looking for advice about operating in a COVID safe environment? Call the Access Canberra Business Liaison Line on **(02) 6205 0900.** | *அறிவுறுத்தல்களுக்கு இணங்கத் தவறினால் குறிப்பிடத்தக்க அபராதங்கள் செலுத்தவேண்டி நேரிடலாம்.*<br><br>*கேள்வி ஏதேனும் இருக்கிறதா? COVID பாதுகாப்பான சூழலில் இயங்குவது குறித்த ஆலோசனை தேடுகிறீர்களா? Access Canberra Business Liaison Line ஐ* ***(02) 6205 0900*** *என்ற எண்ணில் அழைக்கலாம்.* |
| Current as at 9 October 2020 | *Current as at 9 October 2020* |
| **Deliveries, contractors and visitors attending the premises** | ***வளாகங்களுக்குள் நுழையும் Deliveries, ஒப்பந்தக்காரர்கள் மற்றும் பார்வையாளர்கள்*** |
| • Where practical, direct delivery drivers or other contractors visiting the premises to minimise physical interaction with workers.<br>• Use electronic paperwork where practical. If a signature is required, discuss providing a confirmation email instead, or take a photo of the goods onsite as proof of delivery.<br>• Ensure a number of suppliers so that you can maintain adequate stocks of hand soap, paper towel, sanitisers. | • *டெலிவரி டிரைவர்கள் மற்றும் பிற ஒப்பந்தக்காரர்கள், உங்கள் வணிக வளாகத்தில் இருக்கும்போது முடிந்தவரை தொழிலாளர்களுடன் நெருக்கமான தொடர்பில் இருப்பதைக் குறைக்குமாறு அறிவுறுத்தவும் .*<br>• *முடியுமெனில் electronic ஆவணங்களைப் பயன்படுத்துங்கள். கையொப்பம் தேவைப்பட்டால், அதற்கு பதிலாக உறுதிப்படுத்தல் மின்னஞ்சலை வழங்குவது பற்றி உரையாடவும். அல்லது விநியோகத்திற்கான ஆதாரமாக பொருட்கள் கையளிக்கப்பட்ட இடத்தில்வைத்து புகைப்படத்தை எடுக்கவும்.*<br>• *உங்களிடம் கணிசமானளவு விநியோகஸ்தர்கள் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். இதனால் நீங்கள் எப்போதும் போதுமான hand soap, paper towel மற்றும் sanitisers- ஐ பெற்றுக்கொள்ள முடியும்.* |
| **Additional Requirements – Galleries, Museums, National Institutions, and Historic Sites** | ***கூடுதல் நிபந்தனைகள் – காட்சியகங்கள், அருங்காட்சியகங்கள், தேசிய நிறுவனங்கள் மற்றும் வரலாற்று மையங்கள்*** |
| In addition to the general requirements of the COVID Safety Plan, galleries, museums, National Institutions and historic sites are required to: | *COVID Safety Plan-இன் பொதுவான கட்டுப்பாடுகளுக்கு கூடுதலாக, காட்சியகங்கள், அருங்காட்சியகங்கள், தேசிய நிறுவனங்கள் மற்றும் வரலாற்று மையங்கள் பின்வருவனவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும்:* |

| | |
|---|---|
| • Galleries, museums, national institutions and historic sites can open provided there is no more than one person per 4 square metres throughout the venue, and can commence guided tours for groups of up to 20 people (excluding the tour guide).<br>• Manage ingress and egress (with separate points).<br>• Entry of groups are to be separated by time.<br>• Increased frequency of cleaning for high touch areas or items, and rest room facilities. | • *காட்சியகங்கள், அருங்காட்சியகங்கள், தேசிய நிறுவனங்கள் மற்றும் வரலாற்று மையங்கள் 4 சதுர மீட்டர்களுக்கு ஒருவர் என்ற விதி பேணப்படுவதன் அடிப்படையில் மீண்டும் இயங்கலாம். 20 பேருக்கு மேற்படாதவகையில் குழுக்களுக்கான வழிகாட்டியுடனான சுற்றுலாக்களை (guided tours) ஆரம்பிக்கலாம் (சுற்றுலா வழிகாட்டியைத் தவிர)*<br>• *குறிப்பிட்ட இடத்திற்குள் நுழையும் மற்றும் வெளியேறும் நபர்களின் எண்ணிக்கையை நிர்வகிக்கவும் (வெவ்வேறு புள்ளிகளில்)*<br>• *குழுக்களாக வருபவர்களுக்கான அனுமதி வெவ்வேறு நேரத்தில் வழங்கப்பட வேண்டும்.*<br>• *அதிகம் தொடுகைக்குள்ளாகும் பகுதிகள் அல்லது பொருட்கள் மற்றும் ஓய்வு அறை வசதிகளைச் சுத்தம் செய்யும் தடவைகள் அதிகரிக்கப்பட வேண்டும்.* |
| **Additional Requirements – Outdoor attractions and amusements** | ***கூடுதல் நிபந்தனைகள் - வெளிப்புற பொழுதுபோக்கு மற்றும் கேளிக்கைகள்*** |
| • Careful management of flow of groups throughout venue or site. Groups are to be of up to 20, complying with complying with social distancing rules including 1.5m between people and one person per four square metres for the space they are in.<br>• All groups must have supervisory oversight to ensure social distancing is enforced and that groups of greater than 20 people do not form. | • *குறிப்பிட்ட இடத்தில் உள்ள நபர்கள் மற்றும் குழுக்களின் எண்ணிக்கையை நீங்கள் கவனமாகக் கட்டுப்படுத்த வேண்டும். குழு ஒன்றில் 20 பேர் வரை இருக்கலாம். ஆனால் மற்றவர்களுக்கிடையே 1.5 மீட்டர் சமூக இடைவெளியைப் பேணுதல் மற்றும் 4 சதுர மீட்டருக்கு ஒருவர் என்பது உள்ளிட்ட சமூக விலகல் விதிகளுக்கு அவர்கள் இணங்க வேண்டும்.*<br>• *மக்கள் தமக்கிடையில் 1.5 மீட்டர் சமூக இடைவெளியைப் பேணுகிறார்கள் என்பதையும், 20 க்கும் மேற்பட்டவர்களைக் கொண்ட குழு உருவாகவில்லை என்பதையும் உறுதிப்படுத்த அனைத்து குழுக்களும் மேற்பார்வைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.* |
| **Keep up to date on restrictions through the ACT COVID19 website:**<br>www.covid19.act.gov.au | ***ACT COVID19 இணையத்தளத்தின் மூலம் கட்டுப்பாடுகள் குறித்த புதுப்பிக்கப்பட்ட தகவல்களைப் பெறுங்கள்:***<br>*www.covid19.act.gov.au* |
| **The Safe Work Australia website:**<br>www.safeworkaustralia.gov.au/ | ***The Safe Work Australia இணையத்தளம்:***<br>*www.safeworkaustralia.gov.au/* |